**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness : **37**

| | | | |
|---|---|---|---|
| Name: | **அரிகரகணேசன்** | Caste: | |
| Father'sName: | வைரவநாதபிள்ளை | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2,A3, A12, A19, A24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் கன்னிமாரம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறேன். கணபதியாபிள்ளை மகன் பாலசுப்பிரமணியன் என்பவரை தெரியாது. ஆகஸ்டுமாதம் 15ம் தேதி அன்று முதல் நாள் கலவரம் நடந்ததாக தெரிந்துகொண்டேன். சத்திப்பாண்டியன் வகையறாவுக்கும், ஹனிபா வகையறாவுக்கு பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>:-**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்ததார்கள் என்றும் கடந்த 14.08.2007 ம் தேதி காலை 10.15 மணிக்கு நானும் எல்ஆர்எஸ். பாளையம் கணபதியாபிள்ளை மகன் பாலசுப்பிரமணியனும், கூலக்கடை பஜாரில் நின்றுகொண்டிருந்தபோது மவுண்ட் ரோடு மீரான் மைதீன் மகன் அலாவுதீன் ஒரு மோட்டார் சைக்கிளில் வேகமாக கிழக்கு பார்த்து போனார் என்றும் அவருக்கு பின்னால் TN 76 B 4974 என்ற ஆட்டோவை ஹனிபாவும், TN 76 B 9529 என்ற ஆட்டோவை நாகூர் மீரானும் வேகமாக ஓட்டிக்கொண்டு போனார்கள் என்றும் இதற்கிடையே ஒரு மினிபஸ் கூலக்கடை பஜாரில் நின்று ஆட்களை இறக்கி, ஏற்றிக்கொண்டிருந்தது என்றும் அப்போது பஜாரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்ததால் அந்த இடத்தில் TN 76 B 3448 என்ற ஆட்டோ வந்து நின்றது என்றும் அந்த ஆட்டோவை தென்காசி மவுண்ட் ரோமு முகம்மது மைதீன் மகன் யாசர் அராபத் ஓட்டி வந்தார் என்றும் அந்த ஆட்டோவில் ஆபாத் பள்ளிவாசல் தெரு அபுகக்கர் சித்திக், சையத்அலி, சிக்கந்தர், மஞ்சள் பாறை காம்பவுண்ட் முகம்மது இஸ்மாயில் கனி அவன் தம்பி திவான் ஒலி, புதுப்பள்ளி தெரு ஒலிபாட்சா மகன் அயூப் என்ற சேட், மணிசாகுல் என்ற சாகுல் ஹமீது என்ற அபுகொரேரா ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் அந்த சமயத்தில் கூலக்கடை பஜார் LRS பாளையம் சந்திப்பில் இரண்டு கோஷ்டியினர் அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் ஒருவரையொருவர் விரட்டி விரட்டி வெட்டிக், குத்தி தாக்கினார்கள் அப்போது யாசர் அராபத்தும் அவருடன் ஆட்டோவில் வந்தவர்களும் ஆயுதங்களுடன் இறங்கி அங்குமிங்கும் ஓடி சக்திபாண்டியன்

ஆட்களை மறித்தார்கள் என்றும் இதை பார்த்த நாங்களும் பொதுமக்களும் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. சக்திபாண்டியன் எனக்கு அத்தான் முறை வேண்டும். இறந்துபோன செந்தில் எனது அக்காவின் கணவர் ஆவார். சக்திபாண்டியன் வகையறாவின் மீது ஒரு வழககு போடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் இஸ்லாமியர்கள் பிறழ்சாட்சியானால் இவ்வழக்கில் இஸ்லாமியருக்கு எதிரான வழக்கு பலவீனம் ஆகும் என இருவரும் செய்துகொண்ட ரகசிய உடன்படிக்கையின் அடிப்படையில் எங்கள் ரகசிய உடன்படிக்கையின் படி சொர்ணத்தேவர் மகன்களுக்கான வழக்கில் இஸ்லாமியர் களுக்காகவும் இவ்வழக்கில் அவர்களுக்கு எதிரான சாட்சிகளாகிய நாங்கள் பிறழ்சாட்சியாக இருந்தால் எதிரிகள் மீதான வழக்கில் விடுதலை கிடைக்கும் என்ற நோக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**